# மேட்டுப்பாளையம் நகராட்சி

மேட்டுப்பாளையம் நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம் **11.04.2022** ம் தேதி திங்கட்கிழமை காலை **10.00** மணிக்கு கூட்டப்படவுள்ளது. இக்கூட்டத்திற்கு நகர்மன்றத் துணைத் தலைவர் மற்றும் அனைத்து நகர் மன்ற உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்றத் தலைவர்
மேட்டுப்பாளையம் நகராட்சி.

| | |
|---|---|
| 1. | **01.04.2022** முதல் சொத்துவரி பொதுசீராய்வு செய்ய வரப்பெற்ற அரசாணை எண்.**52** (எம்.எஸ்) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, (எம்.ஏIV) துறை நாள்.**30.03.2022** மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு : மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>ந.க.எண்.**1355/2022**/அ2<br>தீர்மானம் எண் : 287<br>தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது |
| 2 | தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.<br>**15**–ஆவது மத்திய நிதி ஆணையம், **2022–2023**–ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e .Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் **2.0** மற்றும் அம்ரூட் **2.0** ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.<br>அரசாணை(நிலை)எண்.**73** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.**19.07.2018** மற்றும் அரசாணை(நிலை) எண்.**76** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.**26.07.2018** ஆகியவற்றில் சொத்து வரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை)எண்.**150** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.**19.11.2019**–ன் படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.<br>தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், **15**வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான |

வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்து வரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022–2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>சொத்துவரி:</u>**

**குடியிருப்பு கட்டடங்கள்(Residential Building) :**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.5 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2 |

**குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(Non-Residential Building) :**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:**

1. 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
2. 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
3. 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
4. 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
5. வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

6. தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

**<u>காலிமனை வரி சீராய்வு:</u>**

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**<u>தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:</u>**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டடுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும் மேட்டுப்பாளையம் நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| வ. எண். | செலவின வகைப்பாடு | தற்போதுள்ளநிலையில் தேவைப்படும் நிதி (Current Liabilities) (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம் | 44.69 |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம் | 2.29 |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் ( டுபிட்கோ, டுபிசெல், பிற) | 131.29 |
| 4 | பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஒய்வுக்கால பணப்பயன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி , நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் ( நிலுவைத் தொகை) | 35.67 |
| | **மொத்தம்** | **213.94** |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும்,

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81–A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், மேட்டுப்பாளையம் நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

7) காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.

8) ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

மேலும் தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யாமல் விடுபட்டுள்ள சாலைகள் / தெருக்கள் / சந்துகள் ஆகியவற்றிற்கு கீழ்கண்டவாறு மண்டலங்கள் நிர்ணயம் செய்யலாம்.

**( தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யாமல் விடுபட்டுள்ள சாலைகள் /**

தெருக்கள் / சந்துகள் ஆகியவற்றின் பட்டியல் மன்றத்திற்கு வைக்கப்பட்டு மண்டலங்கள் நிர்ணயம் செய்யப்பட வேண்டும் )

| SL.No | New Ward No | Name of the Street (New Ward) | Type of Zone | Zone Rate |
|---|---|---|---|---|
| 1 | 2 | சரீப் காலனி | C | |
| 2 | | பாலாஜி நகர் | C | |
| 3 | | எம்.ஆர்.டி நகர் | C | |
| 4 | 8 | பத்மாலயா கார்டன் | B | |
| 5 | | நம்பி கார்டன் | C | |
| 6 | | பெருமாள் தோட்டம் | C | |
| 7 | 12 | கண்ணப்பன் லே அவுட் | C | |
| 8 | 13 | தென்றல் நகர் | C | |
| 9 | | கலியப்பா நகர் | C | |
| 10 | 22 | என்.சி.எம்.எஸ் காலனி | B | |
| 11 | | பெருமாள் லே அவுட்–1 | B | |
| 12 | | பெருமாள் லே அவுட்–2 | B | |
| 13 | | ஜெகநாதன் லே அவுட் | B | |
| 14 | | வெங்கட்ராமன் லே அவுட் | B | |
| 15 | | ஜீவா நகர் | B | |
| 16 | | சுப்பம்மாள் லே அவுட் | B | |
| 17 | 26 | போகையன் லே அவுட் | B | |
| 18 | 27 | கே.கே. நகர்–1 | B | |
| 19 | | கே.கே. நகர்–2 | B | |
| 20 | | கே.கே. நகர்–3 | B | |
| 21 | | கே.கே. நகர்–4 | B | |
| 22 | | கே.கே. நகர்–5 | B | |
| 23 | | கே.கே. நகர் குறுக்கு தெரு–1 | B | |
| 24 | | கே.கே. நகர் குறுக்கு தெரு–2 | B | |
| 25 | | கே.கே. நகர் குறுக்கு தெரு–3 | B | |
| 26 | | அருண் நகர் | B | |
| 27 | 28 | ஜான்சன் ஸ்கொயர் | C | |
| 28 | | தாசம்பாளையம் ரோடு மேற்கு | C | |
| 29 | | சுதா காலனி | B | |
| 30 | 29 | தாசம்பாளையம் ரோடு கிழக்கு | C | |
| 31 | | ராமதாஸ் லே அவுட் | C | |
| 32 | | புருசோத்தமன் லே அவுட் | C | |
| 33 | | பசுவைய்யா நகர் | C | |
| 34 | | பிருந்தாவன் நகர் | C | |
| 35 | | சபரி பாலாஜி நகர் | C | |

| | | | | |
|---|---|---|---|---|
| 36 | | மண்டேலா நகர் காலனி | **C** | |
| 37 | | மண்டேலா நகர் | **C** | |
| 38 | | முனிசிபல் காலனி | **C** | |
| 39 | 30 | அன்னை நகர் | **C** | |
| 40 | | அம்மன் நகர் | **C** | |
| 41 | | ஸ்ரீநிவாசா அவென்யு | **C** | |
| 42 | | பாரிகம்பெனி காலனி | **C** | |
| 43 | 31 | கே.கே. நகர் குறுக்கு தெரு–3 | **B** | |
| 44 | 32 | ஹவுசிங்யூனிட் –1 | **B** | |
| 45 | | ஹவுசிங்யூனிட் –2 | **B** | |
| 46 | | ஹவுசிங்யூனிட் –3 | **B** | |
| 47 | | ஹவுசிங்யூனிட் –4 | **B** | |
| 48 | | ஹவுசிங்யூனிட் –5 | **B** | |
| 49 | | ஹவுசிங்யூனிட் –6 | **B** | |
| 50 | | ஹவுசிங்யூனிட் குறுக்கு வீதி–1 | **B** | |
| 51 | | ஹவுசிங்யூனிட் குறுக்கு வீதி–2 | **B** | |
| 52 | | ஹவுசிங்யூனிட் மெயின் ரோடு | **B** | |
| 53 | | நடூர் ரோடு 3 | **B** | |

அலுவலகக்குறிப்பு : மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
ந.க.எண்.1355/2022/அ2

தீர்மானம் எண் : 288

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது

**3.** மேட்டுப்பாளையம் நகரில் புதியதாக அனைத்து மகளிர் காவல் நிலையம் துவங்கப்படவுள்ளதால் மகளிர் காவல் நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்டும் வரை பொதுமக்கள் எளிதில் வந்து செல்ல ஏதுவாக மகாஜன பள்ளி அருகில் உள்ள மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தின் அருகில் உள்ள பழைய கட்டிடத்தை பயன்படுத்த அனுமதிக்கவும், இக்காவல் நிலையத்திற்கு அதிகளவில் பொதுமக்கள் வந்து செல்ல இருப்பதால், மேற்படி கட்டிடத்தில் குடிநீர், கழிப்பிடம், மின்வசதி, மற்றும் காவல் வாகனங்கள், பொதுமக்களின் வாகனங்கள் நிறுத்துவதற்கு இடவசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மராமத்து பணிகள் செய்து தரவும், பொதுப்பணித்துறை வழிகாட்டுதலின்படி மேட்டுப்பாளையம் நகராட்சியால் நிர்ணயிக்கப்படும் மாத வாடகைத் தொகையினை செலுத்தப்படும் என துணை காவல் கண்காணிப்பாளர் மேட்டுப்பாளையம் அவர்கள் 07.04.2022ல் கடிதம் வழங்கியுள்ளார்கள்.

**அலுவலகக் குறிப்பு** : மேற்கண்ட இடத்தினை பொதுப்பணித்துறை வழிகாட்டுதலின்படி மாதவாடகைக்கு ரூ.14,000/– வழங்குவது குறித்து மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.
ந.க.எண்.1447/2022/அ1

தீர்மானம் எண் : 289

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

| | |
|---|---|
| 4. | மேட்டுப்பாளையம் நகரில் புதியதாக அனைத்து மகளிர் காவல் நிலையம் துவங்கப்படவுள்ளதால் மகளிர் காவல் நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்டும் வரை பொதுமக்கள் எளிதில் வந்து செல்ல ஏதுவாக மகாஜனா பள்ளி அருகில் உள்ள மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தின் அருகில் உள்ள பழைய கட்டிடத்தை பயன்படுத்த அனுமதிக்கவும், இக்காவல் நிலையத்திற்கு அதிகளவில் பொதுமக்கள் வந்து செல்ல இருப்பதால், மேற்படி கட்டிடத்தில் குடிநீர், கழிப்பிடம், மின்வசதி மற்றும் காவல் வாகனங்கள் பொது மக்களின் வாகனங்கள் நிறுத்துவதற்கு இடவசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மராமத்து பணிகள் செய்ய ஆகும் தோராய மதிப்பீடு ரூ. 10.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்<br>தீர்மானம் எண் : 290<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 5. | மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் பழைய குடிநீர் திட்டம் மற்றும் புதிய குடிநீர்த் திட்டத்தில் ஆற்றில் தண்ணீர் எடுக்கும் (intake) வாய்க்கால் நுழைவு வாயில் பவானி ஆற்றில் இருந்து தண்ணீர் எடுக்கும் பகுதியில் பாறைகள் அதிகம் உள்ளதால் நீர்வரத்து குறைந்து நீரேற்றம் பாதிக்கப்படுகிறது. மேலும் ஆற்றில் பில்லூர் அணை திறக்கும் போதும், சமயபுரத்தில் உள்ள பேரேஜில் நீர்வரத்து அதிகம் வரும் போது ஆற்றில் குப்பைகள், தலைமை நீரேற்று நிலையத்தில் நீரேற்றம் செய்யும் இடத்தில் பாறைகளினால் தங்கிவிடுவதால் நீரேற்றம் அடிக்கடி தடைபடுகிறது. ஆதலால் மேற்படி பாறைகளை அகற்றி ரூ. 10.00 இலட்சத்திற்கு தோராயமாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியினை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்<br>தீர்மானம் எண் : 291<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 6. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான கடைகள் காலியாக உள்ள கடைகளை நகராட்சி தொடர்ந்து ஏலம் /ஒப்பந்தப்புள்ளிகள் கேரப்பட்டும், கீழ் கண்ட கடைகள் ஏலம் கோராமல் காலியாக இருந்து வருகிறது. |

| வ. எண் | கடை விபரம் | கடை எண் |
|---|---|---|
| 1 | அண்ணா வணிக வளாகம் | 11 |
| 2 | அண்ணா வணிக வளாகம் | 23 |
| 3 | அண்ணா வணிக வளாகம் | 24 |
| 4 | அண்ணா வணிக வளாகம் | 29 |
| 5 | பேருந்து நிலைய கடை | 33 |
| 6 | பேருந்து நிலைய கடை | 34 |
| 7 | பேருந்து நிலைய கடை | 35 |
| 8 | பேருந்து நிலைய கடை | 36 |
| 9 | பேருந்து நிலைய கடை | 38 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 10 | பேருந்து நிலைய கடை | 39 | |
| | | 11 | பேருந்து நிலைய கடை | 40 | |
| | | 12 | பேருந்து நிலைய கடை | 41 | |
| | | 13 | பேருந்து நிலைய கடை | 43 | |
| | | 14 | பேருந்து நிலைய கடை | 44 | |
| | | 15 | பேருந்து நிலைய கடை | 45 | |
| | | 16 | பேருந்து நிலைய கடை | 57 | |
| | | 17 | பேருந்து நிலைய கடை | 60A | |
| | | 18 | பேருந்து நிலைய கடை | 60B | |
| | | 19 | குமரன் திடல் கடைகள் | 1 | |
| | | 20 | எம்.டி.யு.எப். மேல் மாடி | 8 | |
| | | 21 | எம்.டி.யு.எப். மேல் மாடி | 9 | |
| | | 22 | எம்.டி.யு.எப். மேல் மாடி | 10 | |
| | | 23 | எம்.டி.யு.எப். மேல் மாடி | 11 | |
| | | 24 | எம்.டி.யு.எப். மேல் மாடி | 12 | |
| | | 25 | எம்.டி.யு.எப். மேல் மாடி | 13 | |
| | | 26 | எம்.டி.யு.எப். மேல் மாடி | 14 | |
| | | 27 | அண்ணா தினசரி மார்கெட் கடை | 7 | |
| | | 28 | அண்ணா தினசரி மார்கெட் கடை | 12 | |
| | | 29 | அண்ணா தினசரி மார்கெட் கடை | 17 | |
| | | 30 | அண்ணா தினசரி மார்கெட் கடை | 22 | |
| | | 31 | அண்ணா தினசரி மார்கெட் கடை | 23 | |
| | | 32 | அண்ணா தினசரி மார்கெட் கடை | 25 | |
| | | 33 | பாரதியார் நூற்றாண்டு விழா குடோன் | 1 | |
| | | 34 | பாரதியார் நூற்றாண்டு விழா குடோன் | 2 | |
| | | 35 | பாரதியார் நூற்றாண்டு விழா குடோன் | 3 | |
| | | 36 | பாரதியார் நூற்றாண்டு விழா குடோன் | 4 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 37 | பாரதியார் நூற்றாண்டு விழா குடோன் | 5 | |
| | | 38 | பாரதியார் நூற்றாண்டு விழா குடோன் | 6 | |
| | | 39 | பாரதியார் நூற்றாண்டு விழா குடோன் | 7 | |
| | | 40 | பாரதியார் நூற்றாண்டு விழா குடோன் | 8 | |
| | | 41 | பாரதியார் நூற்றாண்டு விழா குடோன் | 9 | |
| | | 42 | பாரதியார் நூற்றாண்டு விழா கடை | 1 | |
| | | 43 | பாரதியார் நூற்றாண்டு விழா கடை | 2 | |
| | | 44 | பாரதியார் நூற்றாண்டு விழா கடை | 3 | |
| | | 45 | பாரதியார் நூற்றாண்டு விழா கடை | 4 | |
| | | 46 | பாரதியார் நூற்றாண்டு விழா கடை | 5 | |
| | | 47 | பாரதியார் நூற்றாண்டு விழா கடை | 6 | |
| | | 48 | பாரதியார் நூற்றாண்டு விழா கடை | 8 | |
| | | 49 | பாரதியார் நூற்றாண்டு விழா கடை | 9 | |
| | | 50 | பாரதியார் நூற்றாண்டு விழா கடை | 10 | |
| | | 51 | பாரதியார் நூற்றாண்டு விழா கடை | 11 | |
| | | 52 | பாரதியார் நூற்றாண்டு விழா கடை | 12 | |
| | | 53 | பாரதியார் நூற்றாண்டு விழா கடை | 13 | |
| | | 54 | பாரதியார் நூற்றாண்டு விழா கடை | 14 | |
| | | 55 | பாரதியார் நூற்றாண்டு விழா கடை | 15 | |
| | | 56 | மார்கெட் ரோடு ’எ’ பிளாக் | 1 | |
| | | 57 | மார்கெட் ரோடு ’எ’ பிளாக் | 3 | |
| | | 58 | மார்கெட் ரோடு ’எ’ பிளாக் | 4 | |
| | | 59 | மார்கெட் ரோடு ’எ’ பிளாக் | 5 | |
| | | 60 | மார்கெட் ரோடு ’எ’ பிளாக் | 6 | |
| | | 61 | மார்கெட் ரோடு ’எ’ பிளாக் | 7 | |
| | | 62 | மார்கெட் ரோடு ’எ’ பிளாக் | 8 | |
| | | 63 | மார்கெட் ரோடு ’எ’ பிளாக் | 9 | |
| | | 64 | மார்கெட் ரோடு ’எ’ பிளாக் | 10 | |
| | | 65 | மார்கெட் ரோடு ’பி’ பிளாக் | 1 | |
| | | 66 | மார்கெட் ரோடு ’பி’ பிளாக் | 2 | |

| | | |
|---|---|---|
| 67 | மார்கெட் ரோடு 'பி' பிளாக் | 6 |
| 68 | மார்கெட் ரோடு 'பி' பிளாக் | 8 |
| 69 | மார்கெட் ரோடு 'பி' பிளாக் | 9 |
| 70 | மார்கெட் ரோடு 'பி' பிளாக் | 10 |
| 71 | மார்கெட் ரோடு 'பி' பிளாக் | 11 |
| 72 | மார்கெட் ரோடு 'பி' பிளாக் | 12 |
| 73 | மார்கெட் ரோடு 'பி' பிளாக் | 13 |
| 74 | மார்கெட் ரோடு 'சி' பிளாக் மட்டன் | 2 |
| 75 | மார்கெட் ரோடு 'சி' பிளாக் வெஜ் | 1 |

மேற்கண்ட கடைகள் ஏலம்/ஒப்பந்தபுள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : மேற்கண்ட நகராட்சிக்கு சொந்தமான கடைகள் நகராட்சி நிதிநிலையினை கருத்தில் கொண்டு ஏலம்/ஒப்பந்தபுள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.211/2022/அ1

தீர்மானம் எண் : 292

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

7 மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான ஓராண்டு குத்தகை கீழ்கண்ட விவரப்படி ஏல நடவடிக்கையில் உள்ளது.

| வ.எண் | **விவரம்** | |
|---|---|---|
| 1. | அண்ணா தினசரி சந்தைப் பேட்டை சுங்கம் வசூல் உரிமம் | 01.05.2022 முதல் மறு ஏலம்<br><br>(தற்போது துறை வசூல் செய்யப்பட்டு வருகிறது.) |
| 2. | பேருந்து நிலைய நுழைவுக் கட்டண வசூல் உரிமம் | 01.05.2022 முதல் மறு ஏலம்<br><br>(தற்போது துறை வசூல் செய்யப்பட்டு வருகிறது.) |
| 3. | பேருந்து நிலைய பொருட்கள் பாதுகாப்பு அறை | 01.05.2022 முதல் மறு ஏலம்<br><br>21-22 இரண்டாம் ஆண்டிற்கு தொகை செலுத்தப்படாததால் உரிமம் ரத்து செய்யப்பட்டு ஏல நடவடிக்கைக்கு கொண்டுவரப்பட்டது |
| 4.. | அகில இந்திய வானொலி நிலையம் | 01.05.2022 முதல் (01.04.2020 முதல் காலியாக உள்ளதால் ஏல நடவடிக்கைக்கு கொண்டுவரப்பட்டது |

மேற்கண்ட ஓராண்டு குத்தகை இனங்களை மன்றத்தின் பார்வைக்கும், மற்றும் மேற்கண்ட ஓராண்டு குத்தகை இனங்களை ஏலம்/ஒப்பந்தபுள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : மேற்கண்ட நகராட்சிக்கு சொந்தமான் ஓராண்டு குத்தகை இனங்களை நகராட்சி நிதிநிலையினை கருத்தில் கொண்டு ஏலம்/ஒப்பந்தபுள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் : 293

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

8. மேட்டுப்பாளையம் நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு மான்யம் 2021–22 (Untied Grant)ன் கீழ் ரூ. 52.50 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்கண்ட பணிகளுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண் 31117/2021/அம்ரூத்/2, நாள் 29.03.2022 அன்று அனுமதி வழங்கப்பட்டதையடுத்து மேற்க்கண்ட நிதியின் கீழ், கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வார்டு எண் 12, 17, 27, 28, 30 & 31 ல் பாதாள சாக்கடை பணிகளுக்கான வீட்டு இணைப்பு பணிகள் செய்தல் ( 652 எண்ணிக்கைகள்) | 45.64 |
| 2. | வார்டு எண் 3 மற்றும் 4ல் பாதாள சாக்கடை பணிகளுக்கான வீட்டு இணைப்பு பணிகள் செய்தல் (98 எண்ணிக்கைகள்) | 6.86 |
| | **மொத்தம் ( 750 எண்ணிக்கைகள்)** | **52.50** |

அலுவலகக் குறிப்பு : 1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடந்ததற்கும் அனுமதி வழங்கலாம்
(ந.க.எண். 1330 / 2020/ இ1)

தீர்மானம் எண் : 294

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

9. மேட்டுப்பாளையம் நகராட்சியில் 1 முதல் 33 வார்டுகளில் மழைநீர் வடிகால்களில் அடைப்பு ஏற்படுவதாலும், தேங்கி நிற்கும் மழைநீரால் டெங்கு, மலேரியா மற்றும் தொற்று நோய்கள் பரவுதலை தடுத்திட மழைநீர் வடிகால் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ள ரூ. 5.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, இப்பணியினை நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்

தீர்மானம் எண் : 295

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

| | |
|---|---|
| 10. | மேட்டுப்பாளையம் நகராட்சியில் குடிநீர் விநியோகம் தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து Old Scheme, Combined Scheme மற்றும் New Scheme என மூன்று திட்டங்கள் மூலமாக குடிநீர் விநியோகம் செய்யப்படுகின்றது. மேலும் நகராட்சி பகுதிகளுக்கு கே.கே.நகர், மணிநகர், பழைய நகராட்சி அலுவலகம், சங்கர்நகர், எஸ்.எம்.நகர், எல்.ஐ.சி. நகர் மற்றும் பூஸ்டர் மேல்நிலைத் தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகின்றது.<br><br>தற்பொழுது நகராட்சி குடிநீர் பிரிவில் உள்ள குழாய் பணியாளர், மின் பணியாளர்கள் மற்றும் Fountain Cleaner ஆகிய பணியிடங்கள் காலியாக உள்ளது. நகராட்சியில் மூன்று திட்டங்கள் மூலம், 6 மேல்நிலை தொட்டிகள் மூலம் விநியோகம் செய்ய நகராட்சிக்கு குடிநீர் விநியோகம் சீரான முறையில் மேற்கொள்ள கூடுதலாக 21 பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள். இவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர், கோவை அவர்களின் செயல்முறை ஆணைப்படி ந.க.எண் 1457/2020/இ3, நாள் 25.09.2020ல் நிர்ணயம் செய்யப்பட்ட கூலியுடன் ESI, EPF மற்றும் Insurance உடன் வழங்க உத்தேசமாக ரூ. 9.90 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணிக்கு நகர்மன்ற தீர்மானம் எண் 294, நாள் 31.12.2020 மூலம் அனுமதி பெறப்பட்டு 02.05.2022 முதல் 89 நாட்களுக்கு குடிநீர் பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு</u> : மன்றம் அனுமதி வழங்கலாம்<br>தீர்மானம் எண் : 296<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 11. | மேட்டுப்பாளையம் நகர மன்றத்திற்கு புதிதாக பொறுப்பேற்றுள்ள நகர் மன்றத் தலைவர் அவர்களுக்கு ரூ.20.00 லட்சம் செலவில் புதிய Scorpio வாகனம் வாங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு</u> : 1. அனுமதிக்கலாம்<br>2. வருவாய் நிதி மூலம் பெறலாம்.<br>3. முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் ஏற்கலாம்.<br><br>தீர்மானம் எண் 297<br>தீர்மானம் அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 12 | மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் பழைய குடிநீர் திட்டம் 1948ம் ஆண்டு துவக்கப்பட்டு பொதுமக்களுக்கு நேரடியாக குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மீண்டும். 1963ஆம் ஆண்டு கூட்டுக் குடிநீர் திட்டம் (Combined Scheme) துவக்கப்பட்டு காரமடை மற்றும் இந்திய அரசு அச்சகத்திற்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டது. தற்போது கடந்த 22 ஆண்டுகளாக மேட்டுப்பாளையம் நகராட்சிக்கும் பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்பொழுது கடந்த 3 ஆண்டுகளாக நகராட்சியே முழு திட்டத்தை பயன்படுத்தி வருகிறது. இரண்டு திட்டங்களிலும் சேர்த்து சுமார் 7.5 MLD (மில்லியன் லிட்டர்) பயன்படுத்தப்பட்டு வருகிறது.<br><br>கடந்த 2001ஆம் ஆண்டு புதிய குடிநீர் திட்டம் (New Scheme) செயல்படுத்தப்பட்டு நகரில் உள்ள 4 மேல்நிலைத் தொட்டிகள் பழைய நகராட்சி அலுவலகம், சங்கர் நகர், மணி நகர், கே.கே.நகர் மேல்நிலைத் தொட்டிகளில் நிரப்பப்பட்டு பொதுமக்களுக்கு 24 வார்டுகளில் ஒரு நாள் விட்டு ஒருநாளும் 4 வார்டுகளுக்கு 2 நாட்களுக்கு ஒருமுறையும் மீதியுள்ள 5 வார்டுகளுக்கு மூன்று நாட்களுக்கு ஒருமுறையும் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இதில் மின்தடை மற்றும் பைப் உடைப்புகள் ஏற்பட்டால் ஐந்து நாட்களுக்கு மேல் தாமதம் ஆகிவிடுவதால் பொது மக்கள் சிரமப்படுவதாக நகர்மன்றத் தலைவர், துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் புகார்கள் அளித்து வருகின்றனர். |

| | |
|---|---|
| | ஆதலால் மேற்படி குடிநீர் நீரேற்றம் சீர் செய்யும் பொருட்டு புதிய குடிநீர் திட்டத்தில் நான்கு மேல்நிலைத் தொட்டிகளுக்கு நிரப்பப்படுவதால் மணி நகர் மற்றும் கே.கே.நகர் மேல்நிலைத் தொட்டிகளுக்கு நீரேற்றம் குறைவாக உள்ளதால் காலதாமதம் ஏற்படுகிறது. ஆதலால் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நான்கு மேல்நிலைத் தொட்டிகளுக்கு செல்வதை ஏதாதவது ஒரு மேல்நிலைத் தொட்டி( மணி நகர் அல்லது சங்கர் நகர்) பிரித்து கூடுதலாக நீரேற்றம் செய்யவும், இனிவரும் காலங்களில் நகர் அபிவிருத்தி ஆவாதாலும் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படாதவாறு பாதுகாக்கவும், ஏதாவது ஒரு மேல்நிலைத் தொட்டியை பிரித்து தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நீரேற்றம் செய்ய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (TWAD BOARD) உருவாக்கிய திட்டத்தை அவர்களிடம் ஆலோசனை பெற்று விரைவில் நடவடிக்கை எடுக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>தீர்மானம் எண் : 298<br><br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

# மேட்டுப்பாளையம் நகராட்சி

மேட்டுப்பாளையம் நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம் 29.04.2022 ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு கூட்டப்படவுள்ளது. இக்கூட்டத்திற்கு நகர்மன்றத் துணைத் தலைவர் மற்றும் அனைத்து நகர் மன்ற உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்றத் தலைவர்
மேட்டுப்பாளையம் நகராட்சி.

## கூட்டப் பொருள்

| | |
|---|---|
| 1. | மேட்டுப்பாளையத்திலிருந்து சுமார் **10** கி.மீ தொலைவில் உள்ள விளாமரத்தூர் என்ற கிராமத்தில் இருந்து தூய்மையான குடிநீர் எடுக்கவும், குடிநீரை குழாய்கள் மூலம் கொண்டு வந்து சேர்க்கவும், சாமண்ணா தலைமை நீரேற்று நிலையத்தில் சுத்திகரிப்பு செய்து நகரில் மேல்நிலைத் தொட்டிகளுக்கு நிரப்பப்பட்டு நல்ல நிலையில் குடிநீர் வழங்கவும், மேற்படி குடிநீர் திட்டத்தை செயல்படுத்த அரசுக்கு பரிந்துரை செய்ய இந்நகர்மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.<br><br>மேலும், விளாமரத்தூரிலிருந்து இந்நகருக்கு குடிநீர் கொண்டு வரும் பணிகளை மேற்கொள்ள தென்மண்டல தேசிய பசுமை தீர்ப்பாயம் தனது **28.03.2022**ஆம் தேதியில் வழங்கிய தீர்ப்பில் **(**O.A.No**. 10,18,58,105/2017)** அனுமதி அளித்துள்ளதுடன், அதற்கான தக்க கருத்துருவினை அரசுக்கு அனுப்பி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் ஆணையிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட தேசிய பசுமை தீர்ப்பாணையத்தின் ஆணையின்படி விளாமரத்தூரிலிருந்து இந்நகராட்சிக்கு குடிநீர் எடுக்கும் திட்டத்தை செயல்படுத்த தொழில்நுட்ப வல்லுநர்களை நியமித்து விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.<br>தீர்மானம் எண் : 299<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 2. | அரசாணை எண்.**52**, நகராட்சி நிர்வாக மற்றம் குடிநீர் வழங்கல் துறை நாள்.**30.03.2022**ல் 01.04.2022 முதல் சொத்து வரி சீராய்வு (Revision 2022) மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களது ந.க.எண்.**40032/2012**/ஆர்**1** நாள் 01.04.2022ல் சொத்துவரி சீராய்வு தொடர்பாக சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, சொத்துவரி சீராய்வு தொடர்பாக நாளிதழில் விளம்பர அறிவிப்பு , Master Register (மாஸ்டர் பதிவேடு) தயார் செய்தல், உரிய சொத்துவரி சுய மதிப்பீட்டு படிவங்கள் அச்சடித்தல் நகல் எடுத்தல் மற்றும் சிறப்பு அறிவிக்கை (Special Notice) சொத்துவரி விதிப்புதாரர்களுக்கு கூரியர் மூலம் சார்வு செய்யவும் மற்றும் இதர உத்தேச செலவினம் ரூ.7.00 இலட்சத்திற்கு (ஏழு இலட்சம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1355/2022/அ2)<br>தீர்மானம் எண் : 300<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

| | |
|---|---|
| 3. | மேட்டுப்பாளையம் நகராட்சியில் வார்டு எண்.**13** சங்கர் நகர் நடுநிலைப்பள்ளியில் சுமார் **200**க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் உள்ள கழிப்பறை மிகவும் மோசமாக உள்ளது. எனவே, திருமதி.அ.சங்கீதா **13**வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி, மேற்படி கழிப்பறைக்கு மராமத்து பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.**8.00** இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் கல்விநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>தீர்மானம் எண் : 301<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 4. | மேட்டுப்பாளையம் நகராட்சி உள்ளாட்சி சாதாரணத் தேர்தல் 2022 தொடர்பாக G.ரம்யா என்பவரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்.W.P.No. 3479/2022 ன்படி வழக்கு தொடரப்பட்டு மேற்கண்ட வழக்கு நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. இவ்வழக்கில் வாதாடிய திரு.ஆர்.சண்முகசுந்தரம் மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர் திரு.பி.முத்துக்குமார் மாநில அரசு வழக்கறிஞர், ஆகியோருக்கு ரூ.16,000/- (ரூ.12,000 + ரூ.4000) மற்றும் நகராட்சி வழக்கறிஞர் திரு.B.ஆனந்த் அவர்களுக்கு ரூ.15000/- ஆக மொத்தம் ரூ.31,000/- (ரூபாய் முப்பத்தியொராயிரம் மட்டும்) வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :**<br>1. அனுமதிக்கலாம்.<br>2. நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண்.1441/2021/சி3<br>தீர்மானம் எண் : 302<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 5. | மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்றத்தலைவர், நகர்மன்றத் துணைத் தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு தலா இரண்டு அடையாள அட்டைகள் தயாரித்து வழங்கவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.10,000/-க்கும் (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 1441/2021/சி3<br>தீர்மானம் எண் : 303<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

| | |
|---|---|
| 6. | இந்நகராட்சி பகுதியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதாள சாக்கடை திட்டப் பணிக்கு Odour Control Devices Unit (OCU) for lifting stations மற்றும் Jet Roding Machine (Provision for procurement of sewage cleaning machine) ம் மேலும் Fibre Rain Fore Plastic cover களும் தேவைப்படுகிறது. எனவே மேற்கண்ட மூன்று இனங்களையும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதாள சாக்கடை திட்ட நிதியிலேயே மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1819/2016/இ1<br><br>தீர்மானம் எண் : 304<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 7. | மேட்டுப்பாளையம் நகராட்சி பகுதியில் மேல்நிலைப்பள்ளி-1 உயர்நிலைப்பள்ளி-2, ஆரம்பப்பள்ளி 9 பள்ளிகள் என மொத்தம் 12 நகராட்சி பள்ளிகள் இயங்கி வருகிறது. இப்பள்ளிகளில் சுமார் 4000 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர். இம் மாணவ, மாணவிகள் மேல்நிலைக் கல்வி முடித்தவுடன் உயர் கல்வி நிறுவனங்களுக்கு செலவதற்கு மத்திய, மாநில அரசுகள் நடத்தும் போட்டித் தேர்வில் பங்கேற்க பயிற்சி மையங்களை தேடி வெளிமாவட்டங்களுக்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது. இந்நகராட்சி பகுதியில் வசதி வாய்ப்பில்லாத பள்ளி மாணவ மாணவிகள் பயில அரசு சார்பில் மத்திய பல்கலைக்கழகம் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் சேர்வதற்கு பயிற்சி மையங்கள் இல்லை. மேலும் இதர பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகள் மற்றும் பொதுமக்களும் தங்களுடைய அறிவுத் திறனை வளர்த்துக் கொள்ள ஏதுவாக நூலகம் தேவைப்படுகின்றது. எனவே, பள்ளி மாணவ மாணவிகள் நலன் கருதி வார்டு எண்.32 மணி நகர் உயர்நிலைப்பள்ளியின் எதிர்புறம் புதிய நூலகம் மற்றும் அறிவு சார் மையம் (Knowledge Center) அமைக்க அரசிற்கு ரூ.250.00 இலட்சத்திற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து மேல்நடவடிக்கையினை தொடர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. இப்பணியின் அவசர அவசியம் கருதி மேல்நடவடிக்கை தொடர மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>தீர்மானம் எண் : 305<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

| | |
|---|---|
| 8. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான சிராஜ் நகர் பகுதியில் உள்ள குப்பைகிடங்கில் சேகரிக்கப்பட்ட குப்பைகளை சுமார் 32,354$m^3$ அளவிலான குப்பைகளை நவீன முறையில் சுத்தம் செய்யப்பட்டது. மீதமுள்ள சுமார் 9000$m^3$ அளவிலான குப்பைகளை தற்பொழுது நவீன முறையில் (Biomining) மூலமாக சுத்தம் செய்து அவ்விடத்தினை குப்பைகளை அகற்றி மீட்பதற்கு ரூ.75.00 இலட்சத்திற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பி மேல்நடவடிக்கை தொடர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :**<br><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. இப்பணியின் அவசர அவசியம் கருதி மேல்நடவடிக்கை தொடர மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>தீர்மானம் எண் : 306<br><br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 9. | மேட்டுப்பாளையம் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்பொழுது இப்பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது. மேலும் தற்பொழுது 7000 வீட்டு இணைப்புகள் (External Plumbing) அத்துறையினரால் முடிக்கப்பட்டு உள்ளது. இத்திட்டம் முழுமை பெற வீட்டு இணைப்புகள் (Internal Plumbing) நகராட்சியால் கொடுக்க வேண்டியுள்ளது. இதில் 750 இணைப்புகளுக்கு 15 மத்திய நிதி குழும நிதியில் 2021 - 2022 Untied grant நிர்வாக அனுமதி பெறப்பட்டு மேல்நடவடிக்கையில் உள்ளது. தற்பொழுது மீதமுள்ள 6250 வீட்டு இணைப்புகள் (Internal Plumbing) அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.720.00 இலட்சம் மதிப்பீட்டில் பிரேரணைகள் தயாரிக்கப்பட்டு மேல்நடவடிக்கையினை தொடர அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. இப்பணியின் அவசர அவசியம் கருதி மேல்நடவடிக்கை தொடர மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>தீர்மானம் எண் : 307<br><br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

| | |
|---|---|
| 10. | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 18698/2021/தி2 நாள் 23.03.2022ல் நமக்கு நாமே திட்டம் 2021- 2022ன் கீழ் பொது மக்களின் பங்களிப்புடன் செயல்படுத்திட இலக்கு நிர்ணயம் செய்யப்படுத்திட மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு கீழ்க்கண்ட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டது. அதில் குறைந்தபட்ச பொதுமக்கள் பங்களிப்பு திட்ட மதிப்பீட்டில் மூன்றில் ஒரு பங்கும் அதிக பட்சமாக நூறு சதவீதம் வரையில் இருக்கலாம் எனவும் வழிகாட்டு நெறிமுறையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தின் 2021 -2022 ஆம் ஆண்டிற்கு இந்நகராட்சிக்கு ரூ.54.00 இலட்சம் மதிப்பீட்டில் பொதுமக்கள் பங்களிப்பு 18.00 இலட்சமும் அரசு நிதி 36.00 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டு முன்மொழிவுகள் அனுப்ப தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்க்காணும் பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பிரேரணைகள் அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண் 23 சுதா காலனி பகுதியில் உள்ள பூங்காவில் அபிவிருத்தி பணிகள் செய்தல் | ரூ.29.00 இலட்சம் |
| 2 | வார்டு எண் 32 ஜெயந்தி காலனி பகுதியில் உள்ள பூங்காவில் அபிவிருத்தி பணிகள் செய்தல் | ரூ.25.00 இலட்சம் |

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இப்பணியின் அவசர அவசியம் கருதி மேல்நடவடிக்கை தொடர மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் : 308

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

| | |
|---|---|
| 11. | மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் 2022 - 2023 ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடரில் நகராட்சி நிர்வாகத் துறை மானிய கோரிக்கையின் போது 17 மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் ரூ.100.00 கோடி மதிப்பீட்டில் 200 பூங்காங்கள் அமைக்க அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதன் அடிப்படையில் மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு இரண்டு பூங்காக்கள் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் கீழ்க்கண்டவாறு |

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண் 8 சக்தி நகர் பகுதியில் உள்ள பூங்காவில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ.50.00 |
| 2 | வார்டு எண் 28 முல்லை நகர் பகுதியில் உள்ள பூங்காவில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ.25.00 |

மேற்கண்ட பணிகளுக்கு திட்டப் பிரேரணை தயாரித்து மேல்நடவடிக்கையினை தொடர அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இப்பணியின் அவசர அவசியம் கருதி மேல்நடவடிக்கை தொடர மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் : 309

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

12. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண் TN40F 2273க்கு பழுது நீக்கம் செய்யும் பணிக்கு 21.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை ரூ. |
|---|---|---|
| *1* | திருவாளர் ஸ்ரீ **பண்ணாரியம்மன்** மோட்டார் ஒர்க்ஸ், **காந்தி நகர்**, **சத்தி.** | ரூ. 2இ*83*இ*000* ஃ– |
| *2* | திருவாளர் முருகன் ஆட்டோஸ், **ஆட்டோ நகர்**, **மேட்டுப்பாளையம்**. | **ரூ**. *2இ74இ500* ஃ– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர் முருகன் ஆட்டோஸ், **ஆட்டோ நகர்**, **மேட்டுப்பாளையம்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் : 310

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

13. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண் TN40P 3711க்கு பழுது நீக்கம் செய்யும் பணிக்கு 21.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை ரூ. |
|---|---|---|
| *1* | திருவாளர் ஸ்ரீ **பண்ணாரியம்மன்** மோட்டார் ஒர்க்ஸ், **காந்தி நகர்**, **சத்தி.** | ரூ. 3இ*58*இ*500* ஃ– |
| *2* | திருவாளர் முருகன் ஆட்டோஸ், **ஆட்டோ நகர்**, **மேட்டுப்பாளையம்**. | **ரூ**. *3இ48இ500* ஃ– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர் முருகன் ஆட்டோஸ், **ஆட்டோ நகர்**, **மேட்டுப்பாளையம்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் : 311

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

14. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண் TN40M 9694க்கு பழுது நீக்கம் செய்யும் பணிக்கு **21.04.2022** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை ரூ. |
|---|---|---|
| *1* | திருவாளர் ஸ்ரீ **பண்ணாரியம்மன்** மோட்டார் ஒர்க்ஸ், **காந்தி நகர்**, **சத்தி**. | ரூ. 2,07,500 /– |
| *2* | திருவாளர் முருகன் ஆட்டோஸ், **ஆட்டோ நகர்**, **மேட்டுப்பாளையம்**. | **ரூ**. *1இ98இ500* /– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர் முருகன் ஆட்டோஸ், **ஆட்டோ நகர்**, **மேட்டுப்பாளையம்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் : 312

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

15. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண் TN40F 2851க்கு **டயர்கள் 2 மற்றும் பேட்டரி ஒன்று புதியது பெற்றிட** 21.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை ரூ. |
|---|---|---|
| *1* | திருவாளர் ஸ்ரீ **பண்ணாரியம்மன்** மோட்டார் ஒர்க்ஸ், **காந்தி நகர்**, **சத்தி**. | ரூ. 50,500 /– |
| *2* | திருவாளர் முருகன் ஆட்டோஸ், **ஆட்டோ நகர்**, **மேட்டுப்பாளையம்**. | **ரூ**. *49இ100* /– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர் முருகன் ஆட்டோஸ், **ஆட்டோ நகர்**, **மேட்டுப்பாளையம்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் : 313

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

| | |
|---|---|
| 16. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 33 நடூர் துவக்கப்பள்ளியில் அமைந்துள்ள அங்கன்வாடி மையத்தில் அதிக அளவில் மாணவர் சேர்க்கை உள்ளதால் புதிய அங்கன்வாடி கட்டிடம் அமைக்கப்பட்டு அக்கட்டித்திற்கு கூடுதல் பணிகள் (தரைதளம், மின்சார வசதி, குடிநீர் வசதி) ஆகிய பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. திருமதி.ஆ.சுமதி 33 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி இதற்கு ரூ.10.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் கல்விநிதியில் மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>தீர்மானம் எண் : 314<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 17. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 வ.உ.சி துவக்கப்பள்ளியில் அதிக அளவில் மாணவர் சேர்க்கை உள்ளதாக தலைமை ஆசிரியர் தெரிவித்துள்ளார். இதற்கு போதுமான வகுப்பறைகள் இல்லாத காரணத்தால் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்பட்டுள்ளது. இவ்வகுப்பறைக்கு மின்சார வசதி, மேற்கூரையில் Weathering coarse, Plastering ஆகிய மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. திரு. இரா.ஸ்ரீராம் 15வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி இதற்கு ரூ.9.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>தீர்மானம் எண் : 315<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 18. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான குப்பைக்கிடங்கு சிராஜ் நகர் பகுதியில் உள்ளது, இக்குப்பை கிடங்கினை ஆய்வு செய்ய கடந்த 08.01.2022 அன்று கூடுதல் முதன்மைச் செயலர், நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் மற்றும் இதர உயர் அதிகாரிகள் அனைவரும் இருந்தனர். இவ் அனைத்து உயர் அதிகாரிகளும் இவ்விடத்தில் பயன்பாடற்ற இரும்பு மற்றும் இதர பொருட்களையும் உடனடியாக ஏலம் மூலம் அப்புறப்படுத்த அறிவுரை வழங்கி உள்ளனர். இப்பொருட்களின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.<br>1. இரும்பு பலகை –1<br>2. இரும்பு ரேக்குகள் –3<br>3. இரும்பு மேஜை – 2<br>4. இரும்பு குப்பை தொட்டி – 50<br>5. இரும்பு பீரோ –2<br>6. பெரிய மேஜை –1<br>7. மர ரேக்குகள் –5<br>8. சிறிய இரும்பு மேஜை –3 |

| | |
|---|---|
| | **9.** நாற்காலிகள் **–8**<br><br>**10.** மர நாற்காலிகள் – **10**<br><br>**11.** Plywood மேஜை **– 2**<br><br>**12.** இரும்பு வேலி – **1**<br><br>**13.** மர மேஜை **– 3**<br><br>மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து பொருட்களையும் ஏலம் மூலம் அப்புறப்படுத்த நடவடிக்கையினை தொடர அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம்அனுமதி வழங்கலாம்.<br><br>தீர்மானம் எண் : 316<br><br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 19. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகம் பேருந்து நிலையத்தில் செயல்பட்டு வருகிறது. இவ் அம்மா உணவகத்தில் தினந்தோறும் ஏழை எளியோர் உணவருந்தி வருகிறார்கள். எனவே, அம்மா உணவகத்திற்கு சில மராமத்து பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இப்பணிக்கு ரூ.**5.00** இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் பொதுநிதியில் மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம்அனுமதி வழங்கலாம்.<br><br>தீர்மானம் எண் : 317<br><br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 20 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் டெங்கு கொசுப்புழு ஒழிப்புப் பணி மேற்கொள்ள DBC எனப்படும் களப்பணியாளர்களைக் கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவர்களுக்கு மாவட்ட ஆட்சியர், கோவை அவர்களின் 2021 -2022ம் ஆண்டு ஊதிய நிர்ணயப்பட்டியலில் மஸ்தூர் -2 ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூ.420/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது இந்நகராட்சியில் 20800 குடியிருப்புகள் உள்ளன. எனவே 300 வீடுகளுக்கு ஒரு களப்பணியாளர் வீதம் 68 பணியாளர்களை பணியமர்த்தி கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவர்கள் இப்பணியினை 24.04.2022 முதல் 89 நாட்கள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.25,41,840/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1688/2016/ எச்1<br><br>தீர்மானம் எண் : 318<br><br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

| | |
|---|---|
| 21 | இந்நகராட்சியில் அனைத்து பிரிவுகளுக்கும் தேவைப்படும் A4 காப்பியர், லீகல் காப்பியர் மற்றும் கோப்புகளுக்கு தேவைப்படும் ரேப்பர் ஷீட்கள், வெள்ளைத் தாள்கள், வரி செலுத்தும் இரசீதுகள், தகவல் மையத்திற்கு தேவைப்படும் படிவங்கள், அலுவலக உபயோகத்திற்கு தேவைப்படும் பதிவேடுகள், அம்மா உணவகத்திற்கு தேவைப்படும் இரசீதுகள் அனைத்தும் அத்தியாவசியத் தேவையாக உள்ளது. எனவே, எழுதுபொருட்கள், பதிவேடுகள் மற்றும் படிவங்கள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.20 இலட்சம் மதிப்பில் (2022 – 2023ம் ஆண்டிற்கு) THE COIMBATORE DISTRICT PRINTERS SERVICE INDUSTRIAL CO-OPERATIVE SOCIETY LTD .IND NO 1/1996, CBE-1 நிறுவனத்திடமிருந்து வாங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்.<br>தீர்மானம் எண் : 319<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 22. | மேட்டுப்பாளையம் நகராட்சியில் சில சாலைகள் வீட்டின் மட்டத்திற்கு மேல் உள்ளதால் மழைநீர் வீடுகளுக்கு செல்லும் அபாயம் உள்ளது. புதியதாக அமைக்கும் சாலைகள் வீடுகளின் மட்டத்திற்கு கீழாக உள்ளவாறு அமைக்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. ஆதலால் புதியதாக அமைக்கப்படும் சாலைகளில் Box Cutting எடுத்து அதை அப்புறப்படுத்தி சாலை அமைக்க உத்தேசிக்கப்பட்டது. Box Cutting எடுக்கும் பொழுது வீட்டு குடிநீர் குழாய்கள் பழுந்தடைந்து பொதுமக்களுக்கு சீராக குடிநீர் விநியோகிக்க இயலாத நிலை உள்ளது. மேற்படி குடிநீர் குழாய்களை பழுதுநீக்கி பொருத்த ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>தீர்மானம் எண் : 320<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 23. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகள் அரசாணை எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள். 30.04.1997ன் படியும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் , சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 2902/பி3/2016 நாள்.24.02.2016 மற்றும் 18.07.2016ன் படியும் முறையே 61 மற்றும் 90 பணியாளர்களுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட செயல்முறைகளில் 01.07.2019 வரை நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, மேலும் 3 ஆண்டுகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி இவ்வலுவலக ந.க.எண்.எச்1/6219/2106 நாள் 21.01.2019ன் படி நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டதில் சில கூடுதல் விபரங்களுடன் மீண்டும் இவ்வலுவலக ந.க.எண்.எச்1/ 494/2019 நாள்.10.02.2021ல் மீண்டும் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br>சுகாதாரப் பணிகள் பாதிக்காமல் இருக்கவும், பொது சுகாதார அவசர அவசியத்தை கருதி |

| | |
|---|---|
| | நகராட்சி நிர்வாக ஆணையாளர்,சென்னை அவர்களின் அனுமதியினை எதிர்நோக்கி இந்நகராட்சியில் தற்போது தனியார் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவுப் பணி மேற்கொள்ளப்பட்டு வரும் திருவாளர் எஸ். எஸ். இஞ்சினியர்ஸ் என்ற நிறுவனத்திற்கு நகரமன்றத் தீர்மான எண்.237 நாள்.22.01.2022ல் 01.01.2022 முதல் 30.04.2022 முடிய அனுமதி பெறப்பட்டுள்ளது. இவர்கள் மேலும் 01.05.2022 முதல் 31.07.2022 வரை மூன்று மாதங்களுக்கு தொடர்ந்து பணிபுரிய அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :**<br>அனுமதி வழங்கலாம். ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் ஓப்பந்தப்புள்ளி விலை விகிதத்திலேயே தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 498/2019/எச்1<br>தீர்மானம் எண் : 321<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 24 | மேட்டுப்பாளையம் நகராட்சி வார்டு எண்.**13** தென்றல் நகர் பகுதியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் **2021 – 22**ன் கீழ் பேவர் பிளாக் சாலை அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணி துவக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. மேற்கண்ட சாலையில் குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கப்படவில்லை தற்பொழுது அப்பகுதியில் நிறைய குடியிருப்புகளும், புதிய குடியிருப்புகளும் கட்டப்பட்டு அப்பகுதி வளர்ச்சி அடைந்து வருகின்றது. எனவே, பேவர் பிளாக் சாலை பணி முடிக்கப்படும் முன்னரே குடிநீர் பகிர்மான குழாய் பதித்து அப்பகுதி மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியது மிக அத்தியாவசியமாகின்றது. இதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**3.50** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. குடிநீர் நிதியில் செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>தீர்மானம் எண் : 322<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 25. | மேட்டுப்பாளையம் நகராட்சி அலுவலகத்தில் அனைத்து பணிகளும் கணினியில் நடைபெறுவதால் தற்போது உள்ள 5KVA UPS அடிக்கடி பழுதாகிவிடுதால் அலுவலகம் பாதிக்கப்படுகிறது . மேலும் வருவாய் பிரிவில் புதியதாக கணினிகள், பிரிண்டர்கள் வாங்கி இயக்குவதால் 5KVA UPS மின்னோட்டம் (Watts) பற்றாக்குறையாக உள்ளது. ஆதலால் புதியதாக 5KVA UPS வாங்கி தனித்தனியாக பிரிவுகளுக்கு மாற்றி இயக்கிக்கொடுக்க வேண்டியுள்ளது. அலுவலகங்கள் அனைத்தும் ஒரே UPSல் இருப்பதால் பழுது ஏற்பட்டால் அலுவலகம் தடைபடுகிறது. ஆதலால் புதியதாக 5KVA UPS மற்றும் பேட்டரிகள் மற்றும் வயரிங் அமைத்து தனித்தனியாக பிரிவுகளுக்கு அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. **270000/–** க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**(ந.க.எண். 1570/2022/இ1)**<br>தீர்மானம் எண் : 323<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

| | |
|---|---|
| 26. | மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் மூன்று குடிநீர்த்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மூன்று குடிநீர்த் திட்டங்களிலும் ஆற்றில் ராவாட்டரை (Raw Water) நீரேற்றம் செய்து, வடிதளங்கள் மூலம் சுத்தம் செய்யப்பட்டு சுத்த நீராக (Clear Water) மாற்றி, நகரில் மேல்நிலைத் தொட்டிகளில் நிரப்பப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. ஆற்றில் வரும் நீரில் உள்ள கிருமிகளை அழிக்க குளோரின் வாயு பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது கையிருப்பில் சிலிண்டர்கள் காலியாக இருப்பதாலும், இனி வரும் ஆண்டிற்கு (2022–23) தேவையான சிலிண்டர்கள் வாங்கி வைக்கவும், ஆகும் உத்தேச செலவினம் ரூ. 5,00,000/– த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ளப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>** : 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>2.பொது மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கவும் குளோரின் வாயு சிலிண்டர் தேவைப்படுவதால் மேற்படி செலவினத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**தீர்மானம் எண்** : 324<br><br>**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 27. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய கடை எண்.52ற்கு 21.01.2022 அன்று நடைபெற்ற பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் அதிகபட்ச உச்ச கேள்வி தொகையாக ரூ.1,03,072/– கோரிய திரு.கலிபுல்லா அவர்களுக்கு கடை உரிமம் வழங்க அனுமதிக்கப்பட்டது. ஆனால் திரு.கலிபுல்லா கடையின் உரிமத்தை ஏற்க மறுத்து விட்டதால் அதற்கு அடுத்த உச்ச கேள்வி மாதவாடகை தொகையினை ரூ.61,000/– கோரிய திரு.ஜெயலானி த/பெ.ஷாஜகான் என்பவருக்கு 01.05.2022 முதல் மூன்றாண்டுகளுக்கு கடையினை நடத்தி கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் 12 மாத வாடகை தொகை ரூ.7,32,000/– மற்றும் ரூ.5,00,000/– வைப்புத் தொகை செலுத்தியுள்ளார்.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**<br>1. ஏலக் கேள்வி தொகையானது அரசு நிர்ணயித்த தொகையை விட கூடுதலாக இருந்ததாலும் நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படா வண்ணம் வாடகை தொகை உள்ளதாலும் ஏலக்கேள்வி தொகையினை ஏற்கலாம்.<br>2. மேற்படி கடையினை நடத்திக் கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.221/2022/அ1<br><br>**தீர்மானம் எண்** : 325<br><br>**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

28. மேட்டுப்பாளையம் நகராட்சியில் குடிநீர் நிதி **2021–22**ன் கீழ் **27.04.2022**ம் தேதியில் கீழ்காணும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்து வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விழுக்காடு |
|---|---|---|---|---|
| **1.** | நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பம்பிங் மெயின், பகிர்மானக் குழாய் உடைப்பு சரி செய்தல் | **5.00** | M. வேலுசாமி | **0.02%** மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | C. நாகராஜ் | **3.28%** மதிப்பீட்டிற்கு அதிகம் |
| **2.** | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தனியார் மூலம் குழாய் திருப்புநர் பணி மற்றும் அனைத்து மேல்நிலைத் தொட்டிகளுக்கும் காவலர் பணி மேற்கொள்ளுதல் | **9.90** | M. வேலுசாமி | **0.01%** மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | C. நாகராஜ் | **4.26%** மதிப்பீட்டிற்கு அதிகம் |
| **3.** | தலைமை நீரேற்று நிலையத்தில் மூன்று குடிநீர்த் திட்டங்களிலும் சேறுகள் அகற்றுதல் | **3.00** | M. வேலுசாமி | **0.01%** மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | C. நாகராஜ் | **4.50%** மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்படி பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்

தீர்மானம் எண் : 326

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது